[1992 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தை விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்ட விழுப்புரம்-வள்ளலார் மாவட்டம் என்று பிரித்ததன் காரணமாக இப்போது விழுப்புரம் மிகவும் விரைவாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதன் அடிப் படையிலே, அடுத்த ஆண்டிலேயாவது அரசு மகளிர் கலைக் கல்லூரி துவங்குகிற திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கலைக் கல்லூரிகள் தொடங்குவதை ஆதரிக்கின்ற நிலையிலே இன்றைய தினம் இல்லை. அதுவும் அரசின் செலவிலே ஆரம்பிக்கின்ற நிலையில் இல்லை. ஆகவே தனியார் யாராவது ஆரம்பிப் பதாக இருந்தால், அதுகுறித்து அரசு பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 285. திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

285—

அ.வ.அ. கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பேருந்து வசதி.

* 5527 திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நாகப்பட்டினம்— காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடு துறை ஒன்றியம் மன்னம்பந்தல் அ.வ.அ. கல்லூரிக்கு காலை நேரங்களில் மாணவர்கள் செல்வதற்கு சிறப்புப் பேருந்து விட அரசு முன்வருமா?

1992 மார்ச் 20]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மன்னம்பந்தல் அன்பநாதபுரம் வகையறா அறக் கட்டளையின் சார்பாக கல்லூரிக்குக் காலை நேரங்களில் மாணவர்கள் செல்வதற்குப் போதுமான அளவிற்குப் பேருந்து வசதி உள்ளது.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாயூரம் அன்பநாதபுரம் வகையறா அறக்கட்டளையில் கல்லூரி நடந்துகொண்டு வருகிறது. கல்லூரிக்கு முன்னால் பஸ் போய்க்கொண்டு இருந்தது. பின்னர் அதை நிறுத்திவிட்டார்கள். 1,500 மாணவர்கள் படிக்கின்ற அந்தக் கல்லூரியிலே 800 மாணவர்கள் பஸ்ஸிலே போகவேண்டிய நிலைமை இருப்பதனால், அவர்கள் போகின்ற நேரத்திற்கும், வருகின்ற நேரத்திற்கும் கஷ்டமாக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பஸ் விடுவதாக ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 286. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

286—

சந்தனக் கட்டைகள் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை.

*5633 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆரணி தொகுதி காட்டுக்காநல்லூர் பகுதியில் சந்தனக் கட்டைகள் அதிக அளவில் கடத்தப்படுகிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.